கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



நயினார்கோவில் மேற்கு ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



தாரமங்கலம் நகரம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



வரதராஜன்பேட்டை பேரூர்,
அரியலூர் மாவட்டம்.



அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்.



முஞ்சிறை கிழக்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



அரூர் வடக்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



பெத்தானியாபுரம் பகுதி,
மதுரை வடக்கு மாவட்டம்.



தண்டராம்பட்டு மத்தியம் ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## “அன்னம் தரும் அமுதகரம்” 181 வது நாள்!

### கொளத்தூர் மேற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, ஆக.20-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 181 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (19.08.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69 அ, S.R.P கோயில் தெரு, அகரம், காந்தி சிலை அருகில். 2) வட்டம் 66, பாலாஜி நகர் சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ. முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம. அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என். தாவூத் பீ, பி.அமுதா, சி. ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன் மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி. சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதியுடன் சென்று சந்திப்பு!

## வெள்ளக்கோவில் - சங்ககிரி நெடுஞ்சாலை விரிவாக்க கோரிக்கைகளை நிறைவேற்றிடுக!

### ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியிடம் – ஈரோடு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தல்!



புதுடெல்லி,ஆக.20-

வெள்ளக்கோவில் - சங்ககிரி NH-381A குறித்த மக்கள் கோரிக்கைகளை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஒன்றிய அமைச்சரிடம் நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதியுடன் சென்று மனு அளித்து வலியுறுத்தியுள்ளார்.

அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி உறுதி தெரிவித்தார்.

கடந்த மாதம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மற்றும் அமைச்சகத்தின் செயலாளரை தனித்தனியே நேரில் சந்தித்து வெள்ளக்கோவில் முதல் சங்ககிரி சாலை 381A குறித்த சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.

கோரிக்கைகள் பின்வருமாறு:

1. வெள்ளக்கோவில் சங்ககிரி இடையிலான NH-381A தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தின் பாதையானது, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் வீடுகள், விவசாய நிலங்கள் என மக்கள் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் திட்டமிடப்பட வேண்டும்.

2. வெள்ளக்கோவில் சங்ககிரி சாலை NH-381A, ஈரோடு ரயில் நிலையத்திற்கு அருகில் தற்போதுள்ள குறுகிய RUB எண்.352-க்கு பதிலாக ROB மேம்பாலம் கட்டவேண்டும். இந்த மேம்பாலம் ஆனது காளை மாட்டு சிலை முதல் லோட்டஸ் மருத்துவமனை வரை கரூர் பைபாஸ், முத்தூர், மூலனூர் சாலை மற்றும் காங்கேயம் -தாராபுரம் இணைப்பு சாலைகளை இணைத்து போக்குவரத்து நெரிசலை குறைக்கும்.

இதன் தொடர்ச்சியாக நாடாளுமன்ற நேற்று திராவிட முன்னேற்றக் கழக கட்சித் தலைவர் கனிமொழி கருணாநிதி முன்னிலையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரை சந்தித்தார். இந்த சந்திப்பில், வெள்ளக்கோவில் - சங்ககிரி NH-381A விரிவாக்கமானது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் மறுசீரமைப்பு செய்யப்படும் என உறுதியளித்தார்.

மேலும் ஈரோடு ரயில் நிலையத்திற்கு அருகில் RUB எண்.352-க்கு பதிலாக ROB மேம்பாலம் தேவை என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.